THE

TERMINATIONS

OF

TAMIL WORDS.

An Alphabetical List of **One Hundred Terminations**, with their various forces clearly explained and illustrated,

FOR USE IN SCHOOLS AND COLLEGES.

விகுதி விளக்கம்.

இஃது,

அகாராதியாய்த் திரட்டிய ஒருநூறு விகுதிகளையும், அவை யுணர்த்தும் பல பொருள்களையும் நன்கு விளக்குவது.

BY

MOSÚR VÉNKATASWAMI AYER.

Madras:

PRINTED AT THE S. P. C. K. PRESS, VEPERY.

1909.

All Rights Reserved.

Price, 1½ Annas.] [விலை; அணா க௨.

☞ Can be had of the S. P. C. K. Depôt, Vepery, Madras.

S. P. C. K. PRESS, VEPERY, MADRAS.

1909.

முகவுரை.

தமிழிலக்கணத்திற்குத் தந்தையாகிய அகத்திய மாமுனிவரும் அவரது மாணாக்கர் பன்னிருவரு ளொருவராகிய தொல்காப்பியனாரும் ஆக்கிய தமிழிலக்கணங்களில் (முதல் + நிலை) முதனிலை, (கடை + நிலை) கடைநிலை என்னும் பெயர்களால் வருமவைகளைப் பவணந்தியார் முதலாயினோர், ப்ர–க்ரு–தி (प्रकृतिः, 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃, ప్రకృతిః, Prakruthi) என்னும் வடமொழிப் பெயரின் சிதைவாகிய "பகுதி" என்னும் பெயரினாலும், வி–க்ரு–தி (विकृतिः, 𑌵𑌿𑌕𑍃𑌤𑌿𑌃, వికృతిః, Vikruthi) என்னும் வடமொழிப்பெயரின் சிதைவாகிய "விகுதி" என்னும் பெயரினாலுமே பெரும்பாலுங் கூறுவாராயினர்.

இவைகளுள், தமிழிற் பயில்வோர் எவருந் தவறாது அறிந்திருக்கவேண்டிய விகுதிகள், இக்காலவழக்கிலுள்ள நன்னூலிற் காட்டிய பலவும், காட்டாத சிலவும், வந்து வழங்கும் வடமொழிகளில் நின்ற வேறு சிலவுஞ் சேர்ந்து, ஒருநூற்றிற் கதிகமாகின்றன.

இவைகள், ஒரே பொருளை யுணர்த்துவன சிலவும், ஒரே வடிவிற் பலபொரு ளுணர்த்துவன பலவுமாகித் தக்கவாறு காலமுங் கருத்துஞ் செலுத்திக் கற்க வியலாத விக்காலக் கல்விச்சாலை மாணாக்கர்கட்கு நன்கு விளங்காது, அவர்கள் கண்ணையுங் கருத்தையுங் கலக்குகின்றன; சிறிது விளங்கினும் ஞாபகத்தி னீங்கி யோடுகின்றன. இவ்வுண்மைகளை யெண்ணி, அ, இ, உம் போன்ற பலவற்றை யெடுத்து வெவ்வேறு சமயங்களிற் கரும்பலகையில் எழுதி யெழுதி யென் மாணாக்கர்களை யெழுதிக்கொள்ளச் செய்துவந்தனன். வருடந்தோறும் இன்னனஞ் செய்வதில் உண்டாகுங் காலத்தின் நஷ்டத்தையும், சரீரத்தின் கஷ்டத்தையும் நீக்கிக்கொள்ள நாடி ஒருநூறு விகுதிகளை அகராதி முறையிற் றிரட்டி நன்கு விளக்கி, "விகுதி விளக்கம்" என்னும் பெயர்சூட்டிச் சிறுநூலாக்கி யச்சிட்டுக்கொள்ளப் புகுந்தனன்.

அக்காலத்தில், கல்வித்துறையில் உள்ள என் நண்பர் பலர், இதனைக் கண்டு, "இவ் விகுதி விளக்கம் மாணாக்கர்

கட்கு மாத்திரமேயன்றி, ஆசிரியர்கட்கும் பெரிதும் பயன் படுவ தாகும்; பாரம் (Form) மூன்றுமுதற் பல வகுப்புக் களிலுங் கற்குந் தமிழ் மாணாக்கர்கட்கும் நன்மை விளைப்ப தாகும்" என்று கூறித், தாங்களும் பல பிரதிகள் கொள்வ தற்கும் வாக்களித்தனர். அதனாற் றுணிவுகொண்டு சில்லா யிரம் பிரதிகள் அச்சிட்டனன்.

இதுபோன்ற நூலில், தமிழ் வல்லார் எவருமே யறிந்த வைகளையே யன்றி, யான் என்னறிவுகொண்டு புதிதாய்க் கூட் டக்கூடியது ஒன்றுமே யின்றெனினும், இலக்கண நூல்களில் "முதலானவைகள்" என்றும், "இவைபோன்றவைகள்" என் றுங் கூறி, இலக்கியத்தி னுதவிகொண்டு உய்த்துணரவிட்டுள சில விகுதிகளையும், தமிழில் மிகுதியும் வழங்குஞ் சில வட மொழி விகுதிகளையுங் கூட்டியுளேன். எதிர்மறைக் குறிக ளாகிய அல், இல், ஆ என்பவற்றை இடைநிலை என்றும், விகுதியென்றுங் கூறுதலை நோக்கி, விகுதியென்று கூறியுளேன்.

செய்யுட்பாடம், வசனபாடம், இலக்கணம் ஆகிய இவை களைக் கற்கும்போது மாணாக்கர் தம் பக்கத்தில் இவ்விகுதி விளக்கத்தைக்கொண்டு உபயோகிப்பாராயினும், வாரத்திற் கொன்றோ விரண்டோ பாடஞ்செய்துகொள்வா ராயினும் மிக்க தேர்ச்சியுறுவர் என்பது திண்ணம். இந்நூல், பலருக் கும் பயன்படுமாறு, உயர்ந்த கடிதமும், சிறந்த வச்சும், அழ கிய கட்டடமும் அற்ப விலையுமுள்ளதாக வாக்கப்பட்டது.

எல்லோரும் ஒரேவகையான வெண்ணமும், போக்கும் உடையாராகாமையின், இந்நூல் கைக்கு வந்ததும்,

"குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்"

என மேலோரை மிக்க பணிவுடன் யான் வேண்டுகின்றனன்.

சென்னை:
15-1-09.

மோசூர். வேங்கடசாமி ஐயர்.

விஷய சூசிகை.

விஷயம்.	எண்.	விஷயம்.	எண்.	விஷயம்.	எண்.
அ	1	என்	35	தை	69
அடம்	2	ஏ	36	நர்	70
அம்	3	ஏம்	37	ப	71
அரவு	4	ஏல்	38	படு	72
அர்	5	ஏன்	39	பம்	73
அல்	6	ஐ	40	பாக்கு	74
அள்	7	ஒட்டும்	41	பாடு	75
அன்	8	ஒழி	42	பான்	76
ஆ	9	ஓம்	43	பி	77
ஆம்	10	ஓய்	44	பு	78
ஆய்	11	ஓர்	45	மதி	79
ஆர்	12	ஓள்	46	மயம்	80
ஆல்	13	ஓன்	47	மல்	81
ஆளு	14	க	48	மன்	82
ஆள்	15	கள்	49	மார்	83
ஆனை	16	காடு	50	மானம்	84
ஆன்	17	கில்	51	மான்	85
இ	18	கு	52	மி	86
இடு	19	கும்	53	மின்	87
இய	20	கை	54	மே	88
இயர்	21	கொள்	55	மை	89
இர்	22	சல்	56	ய்	90
இல்	23	சாலி	57	வதி	91
இனி	24	சி	58	வளம்	92
இன்	25	சு	59	வாய்	93
இஷ்டன்	26	டு	60	வான்	94
ஈயம்	27	டும்	61	வி	95
ஈர்	28	தலை	62	விடு	96
உ	29	தல்	63	வு	97
உண்	30	தனம்	64	வை	98
உம்	31	தி	65	வ்	99
உள்	32	து	66	றி	100
ஊ	33	தும்	67	று	101
எம்	34	துவம்	68	றும்	102

THE

TERMINATIONS OF TAMIL WORDS.

விகுதி விளக்கம்.

அ.

அ.—1.

(1) அஃறிணைப் பன்மைப்பெயர் விகுதி.
(உ—ம்.) சில கற்றுப் பல வுணர்ந்தீர்.

(2) அஃறிணைப் பன்மை வினைமுற்று விகுதி.
(உ—ம்.) பசுக்கள் வீடு போய்ச் சேர்ந்தன.

(3) உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று விகுதி.
(உ—ம்.) அறத்திற் சிறந்த துணையின்றென உணர.

(4) பெயரெச்ச விகுதி.
(உ—ம்.) தகுந்த வயதிற் கல்லாத சிறுவர், அறிவு இல்லாத கொடிய மூடராவர்.

(5) உடன்பாட்டு முக்காலப் பொது வினையெச்ச விகுதி.
(உ—ம்.) யான் உங்களைக் காண வந்தேன்.

(6) உடன்பாட்டுக் குறிப்பு வினையெச்ச விகுதி.
(உ—ம்.) பாலத்தின்மேல் வண்டியை மெல்ல ஓட்டு.

அடம்.—2.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ-ம்.) இங்குக் கட்டடமும், அங்கு இராவடமும் நடத்துகிறோம்.

அம்.—3.

(1) பண்புப்பெயர் விகுதி.
(உ-ம்.) கல்வியால் வரும் நலங்கள் கூறுவோம்.

(2) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ-ம்.) பழக்கம் வழக்க மாகிவிடும்.

(3) தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.
(உ-ம்.) உம்மைக் காண இங்கு வந்தனம்.

(4) வினைமுதற்பொருள் விகுதி.
(உ-ம்.) இப்பழம் நன்ருய்ப் பழுத்திருக்கிறது.

(5) கருவிப்பொருள் விகுதி.
(உ-ம்.) நோக்கங் கெட்டு நூல் பார்த்தல் விட்டேன்.

(6) செயப்படுபொருள் விகுதி.
(உ-ம்.) ஈயாதார் தேட்டம் இவ்வாறு கெடும்.

அரவு.—4.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ-ம்.) உங்களுக்குத் தேற்றரவு செய்ய வந்தோம்.

அர்.—5.

(1) உயர்திணைப் பன்மைப்பெயர் விகுதி.
(உ-ம்.) இவர் எவர் என் றறியோம்.

(2) உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று விகுதி.
(உ-ம்.) அவர் எனக்கு இந்நன்மை செய்தனர்.

அல்.—6.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ-ம்.) பழிபாவங்களுக்கு அஞ்சல் பேரறிவு.

(2) பண்புப்பெயர் விகுதி.
(உ—ம்.) அல்லல் ஒருகாலம், ஆக்கம் ஒருகாலம்.

(3) முன்னிலை யொருமை எதிர்மறை ஏவல் வினைமுற்று விகுதி.
(உ—ம்.) என் கண்மணீ! இதற்கு நீ சிறிது மஞ்சல்.

(4) உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று விகுதி.
(உ—ம்.) வெல்வது வேண்டின் வெகுளி விடல்.

(5) தன்மை யொருமை யெதிர்கால வினைமுற்றில் விகுதி.
(உ—ம்.) யான் நினக்கு ஒன்று கூறுவல்.

(6) எதிர்மறை விகுதி.
(உ—ம்.) உடலின் நிலையாமை யுன்னலார் மூடரே.

அள்.—7.

(1) உயர்திணைப் படர்க்கைப் பெண்பா லொருமைப் பெயர் விகுதி.
(உ—ம்.) இவள் என் மகள்.

(2) உயர்திணைப் படர்க்கைப் பெண்பா லொருமை வினை முற்று விகுதி.
(உ—ம்.) நம்மரசி நீதியோடு ஆண்டனள்.

அன்.—8.

(1) உயர்திணைப் படர்க்கை யாண்பா லொருமைப்பெயர் விகுதி.
(உ—ம்.) இவன் குணம் அறியாதவன் எவன்?

(2) உயர்திணைப் படர்க்கை யாண்பா லொருமை வினை முற்று விகுதி.
(உ—ம்.) அறிவு மிக்கான் பிறர் பிழை பொறுப்பன்.

(3) தன்மை யொருமை வினைமுற்று விகுதி.
(உ—ம்.) உம்மைக் காண யான் இங்கு வந்தனன்.

ஆ.

ஆ.—9.

(1) உடன்பாட் டிறந்தகால வினையெச்ச விகுதி.
(உ—ம்.) இரவு பகல் நடவா மூன்றும் நாள் அங் குற்றேம்.

(2) அஃறிணைப் பன்மை யெதிர்மறை யெதிர்கால வினை முற்று விகுதி.
(உ—ம்.) மரங்கள் பருவத்தா லன்றிப் பழா.

(3) எதிர்மறை யஃறிணைப் பன்மை வினையாலணைந்த பெயர் விகுதி.
(உ—ம்.) கழிந்தவை யிரங்கான்; கைவரா நச்சான்.

(4) எதிர்மறை விகுதி.
(உ—ம்.) குருட்டுக்கண் இருளை அஞ்சாது.

ஆம்.—10.

(1) தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.
(உ—ம்.) இனி நளன் செய்கை கூறுவாம்.

(2) தன்மைப் பன்மைப் பெயர் விகுதி.
(உ—ம்.) நல்லன நாடினமுக்குத் தீயன எய்தின.

ஆய்.—11.

(1) முன்னிலை யொருமை வினைமுற்று விகுதி.
(உ—ம்.) என் மகனே! ஏன் அழுகிறாய்?

(2) முன்னிலை யொருமைப்பெயர் விகுதி.
(உ—ம்.) எனை நாடிவந்தாய்க்கு யாது செய்வேன்?

(3) முன்னிலை யொருமை யுடன்பாட்டேவல் வினை முற்று விகுதி.
(உ—ம்.) இராமா! உன் பாடங்களைக் கருத்தோ டும் படியாய்.

ஆர்.—12.

(1) உயர்திணைப் படர்க்கைப் பன்மைப்பெயர் விகுதி.
(உ—ம்.) நல்லார் பொல்லார் என்பது நமனுக்கும் உண்டோ?

(2) உயர்திணைப் படர்க்கை வினைமுற்று விகுதி.
(உ—ம்.) பெரியோராவார் எவர்க்குமே நன்மை செய்வார்.

ஆல்.—13.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) சுற்றந்தழால் என்னும் அதிகாரம் படி.

(2) உடன்பாட் டெதிர்கால வினையெச்ச விகுதி.
(உ—ம்.) மழை பெய்தால் பஞ்சம் நீங்கும்.

(3) முன்னிலை யொருமை யெதிர்மறை யேவல் வினை முற்று விகுதி.
(உ—ம்.) மகனே! நீ எதற்கும் அஞ்சால்.

(4) எதிர்மறைக் குறிப்பு வினையெச்ச விகுதி.
(உ—ம்.) உன்னை யல்லால் எனக்காரே வேறு துணை?

ஆளு.—14.

(1) உடைமைப்பொருளை யுணர்த்தும் உயர்திணை இருபா லொருமைப்பெயர் விகுதி.
(உ—ம்.) அவனுந் தயாளு; அவன் மனைவியும் தயாளு.

ஆள்.—15.

(1) உயர்திணைப் படர்க்கைப் பெண்பா லொருமைப் பெயர் விகுதி.
(உ—ம்.) நல்லாள் எவளும் இவை சொல்லாள்.

(2) உயர்திணைப் படர்க்கைப் பெண்பா லொருமை வினைமுற்று விகுதி.
(உ—ம்.) மந்தரை கைகேயியின் மனங் கெடுத்தாள்.
(3) உயர்திணை யாண்பா லொருமைப்பெயர் விகுதி.
(உ—ம்.) பெருமாள் வீதியில் வருவார்.

ஆனை.—16.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) இது வாரானைப் பருவச் செய்யுள்.

ஆன்.—17.

(1) உயர்திணைப் படர்க்கை யாண்பா லொருமை வினைமுற்று விகுதி.
(உ—ம்.) மகனே! அங்கே எவன் வந்தான்?
(2) உயர்திணைப் படர்க்கை யாண்பா லொருமைப்பெயர் விகுதி.
(உ—ம்.) நல்லான் எவனுந் தீயானுடன் சேரான்.
(3) அஃறிணை யொருமைப்பெயர் விகுதி.
(உ—ம்.) கோட்டான் குலத்தைக் காகம் அழித்தது.

இ.

இ.—18.

(1) உடன்பாட்டுத் தெரிநிலை யிறந்தகால வினையெச்ச விகுதி.
(உ—ம்.) கிணற்றில் இறங்கி நீரைக் கலக்கினான்.
(2) முன்னிலை யொருமை வினைமுற்று விகுதி.
(உ—ம்.) நண்ப! ஏன் என்னோடு பேசாது இருந்தி?
(3) உயர்திணைப் படர்க்கைப் பெண்பா லொருமைப் பெயர் விகுதி.
(உ—ம்.) இவள் நம் மாசிக்குத் தோழி.

(4) உடைமைப் பொருட் பெண்பாற்பெயர் விகுதி.
(உ—ம்.) பெருங்கண்ணி ஏதும் பேசாதிருந்தாள்.

(5) வினைமுதற் பொருள் விகுதி.
(உ—ம்.) அவன் பெரிய வாயாடி.

(6) செயப்படுபொருள் விகுதி.
(உ—ம்.) ஊருணிக்குப் போய் நீர் மொண்டுவா.

(7) கருவிப்பொருள் விகுதி.
(உ—ம்.) கந்தா! மண்வெட்டி கொண்டுவா.

(8) முன்னிலை யொருமை ஏவல் வினைமுற்று விகுதி.
(உ—ம்.) நீ இப்பெரியவரோடு உன்னூர் போதி.

(9) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) வெகுளி விளைப்பது விநாசமே.

(10) உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று விகுதி.
(உ—ம்.) ஆவாழி! அந்தணர் வாழி!

இடு.—19.

(1) துணிவுப்பொருள் விகுதி.
(உ—ம்.) எங் கருத்தை யுரைத்திட்டோம்.

இய.—20.

(1) உடன்பாட்டுக் காரியப்பொருள் வினையெச்ச விகுதி.
(உ—ம்.) இராம! நின்னைக் காணிய வந்தேன்.

(2) உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று விகுதி.
(உ—ம்.) வாழிய நின் நாடு, ஊர், செல்வம்.

இயர்.—21.

(1) உடன்பாட்டுக் காரியப்பொருள் வினையெச்ச விகுதி.
(உ—ம்.) ஐயா! உம்மைக் காணியர் வந்தோம்.

(2) உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று விகுதி.
(உ—ம்.) நம் மரசர் நீடூழி வாழியர்.

இர்.—22.

(1) முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி.
(உ—ம்.) நீவிர் எவர் மனையில் உண்டனிர்?

(2) முன்னிலை யேவற்பன்மை வினைமுற்று விகுதி.
(உ—ம்.) நீவிர் என் மகனை யிவண் கொணர்திர்.

(3) உயர்திணை யிருபாற் பன்மை விகுதி.
(உ—ம்.) மகளிர் தீங்கு புத்தேளிர் நாடும் புகுந்தது.

இல்.—23.

(1) உடன்பாட்டுத் தெரிநிலை யெதிர்கால வினையெச்ச விகுதி.
(உ—ம்.) நான் இராமனைக் காணில் உயிர்வாழ்வேன்.

(2) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) இஃது அவர்களுக்குத் தொழில்.

(3) வினைமுதற்பொருள் விகுதி.
(உ—ம்.) நீ யுண்டு மிச்சில் காண்பாய்.

(4) செயப்படுபொருள் விகுதி.
(உ—ம்.) நீராடி, நிமலனைப் பணிந்து, அடிசில் உண்டோம்.

(5) பண்புப்பெயர் விகுதி.
(உ—ம்.) குறில் ஐந்து, நெடில் ஏழு என்று கூறு.

(6) எதிர்மறை வினைமுற்று விகுதி.
(உ—ம்.) நல்வினை ஏதுஞ் செய்திலன்.

(7) இறந்தகாலத்தையும், செயலையும் மறுக்கும் எதிர் மறை விகுதி.
(உ—ம்.) நான் அதனைத் தேடிலேன்.

இனி.—24.

(1) பெண்பா லொருமைப்பெயர் விகுதி.
(உ—ம்.) நமது சக்ரவர்த்தினியார் சரித்திரம் படி.

(2) உடைமைப்பொருட் படர்க்கைப் பெண்பா லொரு மைப்பெயர் விகுதி.

(உ-ம்.) கர்ப்பிணி யல்ல ளிவள்; பிணியாளி.

இன்.—25.

(1) உடன்பாட்டுத் தெரிநிலை யெதிர்கால வினையெச்ச விகுதி.

(உ-ம்.) அறஞ் செய்யின், ஆன துணை பெறுவேம்.

இஷ்டன்.—26.

(1) தமநிலை யுணர்த்தும் விகுதி.

(உ-ம்.) தர்மிஷ்டன் பச்சையப்பன் அறம் வாழி.

☞ பாபிஷ்டன்—கோபிஷ்டன் முதலான பெயர்களினீற்று நின்ற "இஷ்டன்" (Superlative degree) தமநிலை யுணர்த்துவது. "இஷ்டமுள்ளவன்" என்னும் பொருளதன்று.

ஈ.

ஈயம்.—27.

(1) சம்பந்தத்தை யுணர்த்திவரும் பெயர் விகுதி.

(உ-ம்.) (தத் + ஈய—ஆராதனை.) ததீயாராதனை.

(2) குறித்துக் கூறிய நூல் எனும் பொருள் விகுதி.

(உ-ம்.) பிரதாபருத்திரீயம் படிக்கிறோம்.

(3) கர்த்தர்ப்பொருள் உணர்த்தும் விகுதி.

(உ-ம்.) நாரதீயம் படிக்கிறோம்.

ஈர்.—28.

(1) உயர்திணைப் படர்க்கைப் பன்மைப் பெயர் விகுதி.

(உ-ம்.) பெண்டீரும் மக்களும் நந் துணையோ?

(2) முன்னிலைப் பன்மைப்பெயர் விகுதி.
(உ-ம்.) எல்லீரும் இங்கிருங்கள்.

(3) முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி.
(உ-ம்.) நீர் இதற்கு என்ன செய்வீர்?

(4) முன்னிலைப் பன்மை யேவல் வினைமுற்று விகுதி.
(உ-ம்.) மக்காள்! இங்கு வாரீர்; இதைப் பாரீர்.

உ.

உ.—29.

(1) உடன்பாட்டுத் தெரிநிலை யிறந்தகால வினையெச்சத்தில் விகுதி.
(உ-ம்) கீழோர் உண்டு களித்துக் காலங் கழிப்பர்.

(2) பண்புப்பெயர் விகுதி.
(உ-ம்.) மழவு மாறு மதலை யது.

(3) எதிர்மறை வினையெச்சத்தில் விகுதி.
(உ-ம்.) படியாது திரியாதேயுங்கள்.

உண்.—30.

(1) செயப்பாட்டுவினை விகுதி.
(உ-ம்.) அவன் பகைவரால் வெட்டுண்டான்.

உம்.—31.

(1) முன்னிலைப் பன்மை யேவல் வினைமுற்று விகுதி.
(உ-ம்.) ஐயா! இம்மருந்தையே உண்ணும்.

(2) உடன்பாட் டெதிர்காலப் பெயரெச்ச விகுதி.
(உ-ம்.) பிறர் கேடு எண்ணும் மனிதன் கெடுவான்.

(3) அஃறிணை யொருமை யெதிர்கால வினைமுற்று விகுதி.
(உ-ம்.) காகங் கண்ட எதையுந் தின்னும்.

(4) அஃறிணைப் பன்மை யெதிர்கால வினைமுற்று விகுதி.
(உ–ம்.) பறவைகள் யாவும் பறக்குமோ?

(5) உயர்திணை யாண்பா லொருமை யெதிர்கால வினை முற்று விகுதி.
(உ–ம்.) வறிஞன் அவன் யாது செய்யும்?

(6) உயர்திணைப் பெண்பா லொருமை யெதிர்கால வினை முற்று விகுதி.
(உ–ம்.) தமயந்தி இவை யிவை யுன்னும்.

(7) ஏவற் பொருளுள உடன்பாட்டு வியங்கோள் வினை முற்று விகுதி.
(உ–ம்.) நீவிர் இது புரிய வேண்டும்.

உள்.—32.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ–ம்.) விக்குள் காணவே கடவுளைத் துதித்து, இச் செய்யுள் செப்பினர்.

ஊ.

ஊ.—33.

(1) உடன்பாட்டுத் தெரிநிலை யிறந்தகால வினையெச்ச விகுதி.
(உ–ம்.) இராமனைக் காணூக் களித்தனர் முனிவர்

எ.

எம்.—34.

(1) தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.
(உ–ம்.) யாம் இவை எண்ணினெம்.

என்.—35.

(1) தன்மை யொருமை வினைமுற்று விகுதி.
(உ–ம்.) யான் இவை இவை எண்ணினென்.

ஏ.

ஏ.—36.

(1) முன்னிலை யொருமை யெதிர்மறை ஏவல் வினைமுற்றில் விகுதி.

(உ—ம்.) மகனே! எவர்க்குமே தீமை செய்யாதே.

ஏம்.—37.

(1) தன்மைப் பன்மைப்பெயர் விகுதி.

(உ—ம்.) யாம், எல்லோர்க்கும் நல்லேம் அல்லேம்.

(2) தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.

(உ—ம்) நாளை அங்கு வருவேம்.

ஏல்.—38.

(1) முன்னிலை யொருமை யெதிர்மறை யேவல் வினைமுற்று விகுதி.

(உ—ம்.) அரவம் ஆட்டேல்.

ஏன்.—39.

(1) தன்மை யொருமை வினைமுற்று விகுதி.

(உ—ம்.) யான் இவை எண்ணினேன்.

(2) தன்மை யொருமைப்பெயர் விகுதி.

(உ—ம்.) அடியேன் எங்ஙனம் உய்குவேன்?

ஐ.

ஐ.—40.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.

(உ—ம்.) உன் நடைக்குக் கால்கள் தேயும்.

(2) பண்புப்பெயர் விகுதி.

(உ—ம்.) வெள்ளை வேண்டாம், பச்சை எடு.

(3) முன்னிலை யொருமை வினைமுற்று விகுதி.
(உ-ம்.) நீ என்னை அன்னை என்பை.
(4) முன்னிலை யொருமைப்பெயர் விகுதி.
(உ-ம்.) நீ எல்லார்க்கும் நல்லை ஆகாய்.
(5) முன்னிலை யொருமை ஏவல் வினைமுற்று விகுதி.
(உ-ம்.) அஞ்சலை, வருதி, என்றழைத்தனர்.
(6) வினைமுதற்பொருள் விகுதி.
(உ-ம்.) வௌவால் பறவையோ மிருகமோ?
(7) செயப்படுபொருள் விகுதி.
(உ-ம்.) பாதி அடையும், வெங்நீருங் கொடு.
(8) கருவிப்பொருள் விகுதி.
(உ-ம்.) பார்வை கெட்டுப் படிப்பை நிறுத்தி விட்டேன்.

ஒ.

ஒட்டும்.—41.

(1) "ஒ" கெட்டு, ட்டும் என நின்ற முன்னிலை யொழிந்த விடத் தீரெண் ஏவல் வினைமுற்று விகுதி.
(உ-ம்.) நான் போகட்டும், அவர் வரட்டும்.

ஒழி.—42.

(1) இரக்கப் பொருள் விகுதி.
(உ-ம்.) எம்பெருமான் தொண்டனென வறியாது கெட்டொழிந்தேன்.

ஓ.

ஓம்.—43.

(1) தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.
(உ-ம்.) யாம் மதுரைக்குப் போகின்றோம்.
(2) தன்மைப் பன்மைப்பெயர் விகுதி.[1]
(உ-ம்.) எல்லோமும் உம்மோடு வருவோம்.

ஓய்.—44.

(1) "ஆய்" என்னும் முன்னிலை யொருமைப்பெயர் விகுதியின் ஈற்றயல் "ஆ"—"ஓ" வாகி வந்தது.

(உ–ம்.) நீ எவருக்கும் நல்லோய்.

ஓர்.—45.

(1) "ஆர்" என்னும் உயர்திணை யிருபாற் பன்மைப்பெயர் விகுதியின் ஈற்றயல் "ஆ"—"ஓ" வாகி வந்தது.

(உ–ம்.) பெரியோர் சிறியோர் எல்லோரும் நகைத்தனர்.

ஓள்.—46.

(1) "ஆள்" என்னும் படர்க்கைப் பெண்பா லொருமைப் பெயர் விகுதியின் ஈற்றயல் "ஆ"—"ஓ" வாகி வந்தது.

(உ–ம்.) சீதை அருந்ததியிற் சிறந்தோள் என்று அவ்வரக்க னறியான்.

ஓன்.—47.

(1) "ஆன்" என்னும் உயர்திணை யாண்பா லொருமைப் பெயர் விகுதியின், ஈற்றயல் "ஆ"—"ஓ" வாகி வந்தது.

(உ–ம்.) அவன், ஜகதீசனுக்கு நல்லோன் ஆனான்.

க.

க—48.

(1) வியங்கோள் வினைமுற்று விகுதி.

(உ–ம்.) அறம் ஓங்குக; மறம் ஒங்கற்க.

கள்.—49.

(1) இருதிணையிலும் பன்மைப்பெயர் விகுதி.

(உ–ம்.) என் தம்பிகள் மயில்கள் வளர்த்தனர்.

(2) இருதிணைப் பன்மைப்பெயர்களிலும் விகுதிமேல் விகுதி.

(உ–ம்.) அரசர்களுக்கு எவைகள் அரியவைகள்?

காடு.—50.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.

(உ–ம்.) இதனால் மூப்புஞ் சாக்காடும் நீங்கும்.

கில்.—51.

(1) ஆற்றலை யுணர்த்தும் விகுதி.

(உ–ம்.) மேலோர் பிறர் துயர் தீர்க்கிற்பார்.

கு.—52.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.

(உ–ம்.) இது ஜனங்கள் போக்கு வரவு இல்லா வழி.

(2) பண்புப்பெயர் விகுதி.

(உ–ம்.) நன்கு தீங்கு நாடாது ஏதும் பேசேல்.

(3) இடப்பொருள் விகுதி.

(உ–ம்.) அங்கும் இங்கும் பாராமல் உன் வேலையைப் பார்.

(4) பிறவினைப்படுத்தும் விகுதி.

(உ–ம்.) பரதனை அரசனுக்கு, இராமனை வனம் போக்கு.

(5) தன்மை யொருமை எதிர்கால வினைமுற்று விகுதி.

(உ–ம்.) இனி யான் என் செய்கு? (செய்வேன்.)

கும்.—53.

(1) தன்மைப் பன்மை யெதிர்கால வினைமுற்று விகுதி.

(உ–ம்.) யாம் இனி உண்கும் (உண்போம்.)

கை.—54.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ-ம்.) நீ இங்குத் தனியே இருக்கை தகுதியன்று.

(2) உடன்பிறந்தமை யுணர்த்தும் பெண்பா லொருமைப் பெயர் விகுதி.
(உ-ம்.) சீதேவி தங்கை; மூதேவி தமக்கை.

கொள்.—55.

(1) தனக்குச் செய்துகொள்ளலை யுணர்த்தும் விகுதி.
(உ-ம்.) அவன் தன்னையே நொந்துகொண்டான்.

(2) தற்செயல் குறிக்கும் விகுதி.
(உ-ம்.) துணியைக் கிழித்துக்கொண்டேன்.

(3) தற்பொருட்டு உணர்த்தும் விகுதி.
(உ-ம்.) நீ அதை வைத்துக்கொண்டாய்.

ச.

சல்.—56.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ-ம்.) குளிருங் காய்ச்சலும் வந்துவிட்டன.

சாலி.—57.

(1) உடைமைப்பொருளுணர்த்தும் ஆண்பா லொருமைப் பெயர் விகுதி.
(உ-ம்.) குணசாலியாகிய ஒரு புதல்வனை வேண்டு வேன்.

சி.—58.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ-ம்.) முயற்சி யில்லாம லேதும் முடியாது.

(2) பண்புப்பெயர் விகுதி.

(உ—ம்.) கற்பின் மாட்சி யில்லாள் கணவனுக்கு மறலி.

சு.—59.

(1) பிறவினைப்படுத்தும் விகுதி.

(உ—ம்.) இப்பாலே இன்னுங் காய்ச்சு.

(2) செயப்படுபொருள் விகுதி.

(உ—ம்.) அம் முடிச்சு இங்கே யில்லை.

டு.

ரு.—60.

(1) அஃறிணை யொருமை யுடன்பாட்டுக் குறிப்பு வினை முற்று விகுதி.

(உ—ம்.) முன்பு இங்கு ஒரு கிணறு உண்டு.

(2) பிறவினைப்படுத்தும் விகுதி.

(உ—ம்.) காலமும் அளவும் தவறாமல் சிறுவர்க்கு உணவு ஊட்டு.

(3) தன்மை யொருமை யிறந்தகால வினைமுற்று விகுதி.

(உ—ம்.) யான் நேற்று அவன் மனையில் உண்டு.

(4) இடப்பொருள் விகுதி.

(உ—ம்.) அவற்றை யீண்டு எடுத்துரைப்போம்.

ரும்.—61.

(1) தன்மைப் பன்மை யிறந்தகால வினைமுற்று விகுதி.

(உ—ம்.) இப்பணிகள் யாம் முன்னாளிற் பூண்டும்.

த.

தலை.—62.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) குற்றமற்றவர் விடுதலை பெறுவர்.

தல்.—63.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) சிறுவரை இங்கு ஆட விடுதல் தீது.

(2) உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று விகுதி.
(உ—ம்.) நீவிர் மனத்துக்கண் மாசிலார் ஆதல்.

(3) எதிர்மறை வியங்கோள் வினைமுற்று விகுதி.
(உ—ம்.) அறிஞர் எதனையும் ஆராயாது புரிதல்.

தனம் (த்வம்).—64.

(1) "த்வம்" என்பது சிதைந்தான தன்மைப்பொருள் விகுதி.
(உ—ம்.) நான் உன் சூரத்தனம் அறிவேன்.

தி.—65.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) மூப்பில் மறதி மிகுதி என்றறி.

து.—66.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) முன்போற் போக்கு வரத்து இல்லை.

(2) பண்புப்பெயர் விகுதி.
(உ—ம்.) நன்று தீது நாடாது பேசேல்.

(3) பிறவினைப்படுத்தும் விகுதி.
(உ—ம்.) நான் வருமட்டும் அவனை அங்கேயே இருத்து.

(4) அஃறிணை யொருமைப்பெயர் விகுதி.
(உ—ம்.) மனிதனை அது, இது என்னுதே.

(5) தன்மை யொருமை யிறந்தகால வினைமுற்று விகுதி.
(உ—ம்.) யான் இங்கு நேற்று வந்து (வந்தேன்.)

(6) தன்மை யொருமை யெதிர்கால வினைமுற்று விகுதி.
(உ—ம்.) யான் நாளை வருது (வருவேன்.)

(7) அஃறிணை யொருமை வினைமுற்று விகுதி.
(உ—ம்.) இஃது நேற்று வந்தது.

(8) உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று விகுதி.
(உ—ம்.) எவரும் ஏழு மணிக்கே வந்து சேர்வது.

தும்.—67.

(1) தன்மைப் பன்மை இறந்தகால வினைமுற்று விகுதி.
(உ—ம்.) யாம் நேற்று வந்தும் (வந்தோம்.)

(2) தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று விகுதி.
(உ—ம்.) யாம் தசரதன் மதலையாய் வருதும்.

துவம் (த்வம்).—68.

(1) தன்மைப்பொருள் விகுதி.
(உ—ம்.) ராஜத்துவம் எளிதோ?

தை (தா).—69.

(1) பண்புப்பெயர் விகுதி.
(உ—ம்.) அகந்தை மமதைகள் அறுவது அரிது.

(2) பெற்றமை யுணர்த்தும் ஆண்பாற்பெயர் விகுதி.
(உ—ம்.) இவர் எந்தை.

ந.

நர்.—70.

(1) பண்புப்பெயர் விகுதி.
(உ—ம்.) இவையாவும் நன்னர் நிகழ்ந்தன.

ப.

ப.—71.

(1) உயர்திணைப் பன்மை யெதிர்கால வினைமுற்று விகுதி.
(உ—ம்.) சான்றோர் பிறருயிரைத் தம்முயிராய் எண்ணுப.

படு.—72.

(1) செயப்பாட்டுவினை விகுதி.
(உ—ம்.) அது இவனாற் செய்யப்படும்.

பம்.—73.

(1) பண்புப்பெயர் விகுதி.
(உ—ம்.) வெப்பமிகுந்த நாளில் தட்பமாகிய நீர் குடிமின்.

பாக்கு.—74.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) உய்பாக்கு உணர்ந்து ஒழுகுமின்.
(2) உடன்பாட்டுக் காரியப்பொருள் வினையெச்ச விகுதி.
(உ—ம்.) இதனை நுமக்குத் தருபாக்கு வந்தோம்.

பாடு.—75.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) இறந்தாலும் பொய் பேசலாகாதென்பது சான்றோர் கோட்பாடு.

பான்.—76.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) கள்ளுண்டார் பிதற்றுவதற்குக் கேட்பான் ஏன்?

(2) உடன்பாட்டுக் காரியப்பொருள் வினையெச்ச விகுதி.
(உ—ம்.) இலக்கணங் கற்பான் இவ்வூரடைந்தோம்.

பி.—77.

(1) பிறவினைப்படுத்தும் விகுதி.
(உ—ம்.) நம்மரசன் இக்கட்டளை பிறப்பித்தான்.

(2) பின் பிறந்தமையை யுணர்த்தும் ஆண்பா லொருமைப் பெயர் விகுதி.
(உ—ம்.) இவன் என் தம்பி.

பு.—78.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) பிறப்பு இறப்பு இல்லாத நாடு எது?

(2) பண்புப்பெயர் விகுதி.
(உ—ம்.) இன்பும் துன்பும் எண்ணுன் எவன்?

(3) பிறவினைப்படுத்தும் விகுதி.
(உ—ம்.) அவனை யெழுப்பு.

(4) உடன்பாட் டிறந்தகால வினையெச்ச விகுதி.
(உ—ம்.) நீராடுபு நிமலனைத் தொழச் சென்றேம்.

ம.

மதி.—79.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) ஏற்றுமதி அதிகம்.

(2) உடைமைப்பொருட் பெண்பா லொருமைப்பெயர் விகுதி.
(உ—ம்.) அப்பெண்ணின் பெயர் பாநுமதி.

மயம்.—80.

(1) இன்னதனுல் ஆனது என்னும் பொருள் விகுதி.
(உ-ம்.) ஸ்வர்ண மயமான சிவிகையில் வந்தார்.

மல்.—81.

(1) எதிர்மறை வினையெச்சத்தில் விகுதி.
(உ-ம்.) எண்ணுமல் எதுஞ் செய்யேல்.

மன்—82.

(1) பண்புப்பெயர் விகுதி.
(உ-ம்.) கருமன். செம்மன். வெறுமன்.

(2) உயர்திணை யாண்பா லொருமைப்பெயர் விகுதி.
(உ-ம்.) இவன் வடமன்.

மார்.—83.

(1) உயர்திணைப் பன்மைப்பெயர் விகுதி.
(உ-ம்.) பெண்களின் நன்னடை தீநடைகளுக்குத் தாய்மாரே காரணம்.

(2) உயர்திணைப் பன்மை யெதிர்கால வினைமுற்று விகுதி.
(உ-ம்.) சான்ருேர், பிறர்பால் குணமேகொண்மார்.

(3) எதிர்மறை முன்னிலைப் பன்மை யேவல் வினைமுற்றில் விகுதி.
(உ-ம்.) பிறர் பிழை காணன்மார் எமரீர்.

மானம்.—84.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ-ம்.) அவன் வருமானம் குன்றிப்போனது.

மான்.—85.

(1) உயர்திணை யாண்பா லொருமைப்பெயர் விகுதி.
(உ-ம்.) நங் கோமான் வருவர்.

மி.—86.

(1) உடைமைப்பொரு ளாண்பால் ஒருமைப்பெயர் விகுதி.
(உ—ம்.) ஸ்வாமி! யான் வாக்மி அல்லேன்.

மின்.—87.

(1) முன்னிலை.ஏவற் பன்மை வினைமுற்று விகுதி.
(உ—ம்.) நீவிர் இவ்வழியே எகுமின்.

மே.—88.

(1) எதிர்மறை வினையெச்சத்தில் விகுதி.
(உ—ம்.) அவரைக் காணுமே கலங்குகின்றோம்.

மை.—89.

(1) காலங்காட்டுந் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) அவன் வந்தமை, வாராமை எழுது.

(2) பண்புப்பெயர் விகுதி.
(உ—ம்.) தீமையை விட்டு நன்மையைப் பிடி.

(3) எதிர்மறை வினையெச்சத்தில் விகுதி.
(உ—ம்.) கல்லாமை காலங் கழித்தோம்.

(4) எதிர்மறை வியங்கோள் வினைமுற்றில் விகுதி.
(உ—ம்.) கன்று சாவப் பால் கறவாமை.

(5) பிறவினை யுணர்த்தும் விகுதி.
(உ—ம்.) இம்மை செம்மையாயின் உம்மை யுறும்.

(6) தன்மை யுணர்த்தும் விகுதி.
(உ—ம்.) அர்ஜுனன் வின்மை நீவிர் அறியீரே?

ய.

ய்.—90.

(1) உடன்பாட் டிறந்தகால வினையெச்ச விகுதி.
(உ—ம்.) நீ போய் உன் பாடம் படி.

வ.

வதி.—91.

(1) உடைமைப்பொருட் பெண்பா லொருமை விகுதி.
(உ—ம்.) லீலாவதியின் புகழ் கூறுவோம்.

வளம்.—92.

(1) உடைமைப்பொருள் அஃறிணை யொருமைப்பெயர் விகுதி.
(உ—ம்.) தந்தி என்பதும் தந்தாவளம் என்பதும் ஒரே பொருளன.

வாய்.—93.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) இவர் வருவாய் மிக்கவர்.

வான்.—94.

(1) உடைமைப்பொரு ளுயர்திணை யாண்பா லொருமைப்பெயர் விகுதி.
(உ—ம்.) குணவான் இவன்.
(2) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) நீ இதற்குக் கலங்குவான் ஏன்?
(3) காரியப்பொருள் வினையெச்ச விகுதி.
(உ—ம்.) கூற்றம் நம்மைக் கொல்வான் வரும்.

வி.—95.

(1) பிறவினைப்படுத்தும் விகுதி.
(உ—ம்.) இதை யுன் தந்தைக்கு அறிவி.
(2) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ—ம்.) கல்வி கேள்விகளிற் பெரியவர் இவர்.
(3) உடைமைப்பொருளாண்பால் ஒருமைப்பெயர் விகுதி.
(உ—ம்.) தேசஸ்விகளுக்குத் தலைவன் சூரியன்.

விடு.—96.

(1) துணிவுப்பொருள் விகுதி.
(உ-ம்.) அவரை அதைக் கேட்டுவிட்டேன்.

(2) இரக்கப்பொருள் விகுதி.
(உ-ம்.) பாலைக் கொட்டிவிட்டேன்.

(3) செயன் முற்றினமை யுணர்த்தும் விகுதி.
(உ-ம்.) சூரியன் மறைந்துவிட்டான்.

வு.—97.

(1) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ-ம்.) அறிவொடு தெளிவும் வேண்டும்.

வை.—98.

(1) அஃறிணைப் பன்மைப்பெயர் விகுதி.
(உ-ம்.) அவை எவை?

(2) காலங்கருதா வுடன்பாட்டுத் தொழிற்பெயர் விகுதி.
(உ-ம்.) இது நீர்க்கோவை.

வ்—99.

(1) அஃறிணைப் பன்மைப்பெயர் விகுதி.
(உ-ம்.) அவ் இவ் என்பன, அவை இவை என்னும் பொருளன.

ற.

றி.—100.

(1) பண்புப்பெயர் விகுதி.
(உ-ம்.) நன்றி மறப்பவர் நல் வாழ்வு அடையார்.

(2) எதிர்மறைக் குறிப்பு வினையெச்ச விகுதி.
(உ-ம்.) என்னை யன்றி ஏழுபேர் வந்தார்கள்.

று.—101.

(1) பிறவினைப்படுத்தும் விகுதி.
(உ-ம்.) அவனை நமது நாட்டைவிட்டு அகற்று.

(2) பண்புப்பெயர் விகுதி.
(உ-ம்.) நன்று தீது எண்ணிப் பேசு.

(3) அஃறிணை யொருமை வினைமுற்று விகுதி.
(உ-ம்.) கோழி யப்போதே கூவிற்று.

(4) காலப்பொருள் விகுதி.
(உ-ம்.) இன்றுமுதல் என்றுவரை வேலைக்கு வருவீர்?

(5) உடைமைப்பொரு ளஃறிணைப்பெயர் விகுதி.
(உ-ம்.) களிறு.

றும்.—102.

(1) தன்மைப் பன்மை யிறந்தகால வினைமுற்று விகுதி.
(உ-ம்.) யாம் அவண் முன் னொருகாற் சென்றும்.

(2) தன்மைப் பன்மை யெதிர்கால வினைமுற்று விகுதி.
(உ-ம்.) யாம் நாளையே யவண் சேறும்.

விகுதி விளக்கம் முற்றிற்று.

PRINTED AT THE S. P. C. K. PRESS, MADRAS—1909.

THE BHAGAVAD GITA

A METRICAL TRANSLATION INTO TAMIL

BY

S. MUTHU IYER, B.A.,

Head Master, Hindu High School, Masulipatam

ஸ்ரீ பகவத்கீதை வெண்பா

இஃது

திரிசிரபுரம் ஜில்லாவைச் சார்ந்த

திருநயம். ஸா. முத்து ஐயரால்

Price, Re. 1.] இயற்றப்பட்டது. [விலை, ரூபா க.

☞ 10, 20, 50, 100, புஸ்தகங்கள் வாங்குவோர்க்கு அணா 12, 10, 8 வீதம் விற்கப்படும்.

Can be had of all the Booksellers mentioned on the other cover.

FIVE HUNDRED
INSTRUCTIVE TAMIL PROVERBS

WITH THEIR ENGLISH EQUIVALENTS

For use in Secondary Schools

ஆராய்ந்தெடுத்த ஐந்நூறு பழமொழிகளும்

அவற்றிற்கேற்ற ஆங்கிலப் பழமொழிகளும்

COMPILED BY

MOSÚR VÉNKATASWAMI AIYER

PUBLISHED BY

R. VENKATACHALAM & CO.,

Triplicane, Madras.

Price, As. 2] [விலை, அணா உ.

A. E. SOOBBIAH AVL.,

Merchant of Benares Silk,

Sells all Silk Goods at Benares rate,

74 Nayiniyappa Naick Street, **MADRAS.**

THE SECRET OF MEMORY

OR

THE ART OF NEVER FORGETTING

(*2nd Edition Revised and Enlarged*) **8 As.**

Contains hints on the study of poetry, literature, history and biography. Any one will be interested in the chapter on the Perpetual Almanac which will enable any one to calculate the week day for ANY date in the *Kaliyuga*.

"MEMORY-AID" SERIES

	RS.	A.	P.
No. 1.—Memory-Aid to the History of England (from the Tudor Period)	0	6	0
No. 2.—The Matriculation History of India for the 1909 Examination. (Modern India Period) (only a few copies left)	0	4	0
No. 3.—A Memory-Aid to the History of Greece ...	0	4	0
No. 4.—A Memory-Aid to the History of Rome...	0	4	0
No. 5.—A Hundred Famous Authors in English Literature	0	4	0
No. 6.—Law cases and History of Roman Law ...	0	6	0
No. 7.—**A Course of Phonal Shorthand** (a new and original method of studying Pitman's Shorthand with over 75 pages of model Shorthand)—in six parts, 220 pp. ...	1	0	0

PHONAL AIDS TO PHONOGRAPHY

No. 1.—Phonal Dictionary, 225 pp.	0	8	0
No. 2.—Phonal Digest, 240 pp.	0	8	0
No. 3.—Phonal Decipherer, 280 pp.	0	8	0
No. 4.—Phonal Dictator, Dictation Exercises on word and phrase outlines, complete in six parts, 255 pp.	1	8	0

Apply to—

Messrs. V. KALYANARAMA AIYAR & Co.,

Esplanade Row,

MADRAS.